# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஆ 1-க்கு ரூ. | 5-00 |
| வெளியூர், இந்தியா: | " ரூ. | 9.40 |
| தொலைப்பகுதி: | " ரூ. | 9.40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒரு கலம் | | ரூ. 9-40 |
| " | அரைக்கலம் | ரூ. 5-00 |
| " | கால்கலம் | ரூ. 3-15 |
| " | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு வேறு விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௯. } யாழ்ப்பாணம்:—விபவஸூ ஆனிமீ ௧௨௨, (1928 ஜூன் 25) திங்கட்கிழமை. { இலக்கம்—௬௭.


உ

கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேறு
மதம்பூத்த விநாயகன் றாள் வணங்கி வாழ்வாம்,

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகளைமைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமூஸ்லி, சபேதமூஸ்லி, பிஸ்தாஸ, சாரப்பருப்பு, பாதாமபருப்பு, சாத்தாவாரி, அமுக்கிரா விதை, காகபூ வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம, பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாமபிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, சூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல, காசம பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம, கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாசிராச்சியப்பகுதிகளு வீ. பி. சட்டம் இல்லாதபடியால் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞானஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

## ஜாதக விளம்பரம்.

ஜாதகபலன் அறியவிரும்புவோர், ஜாதகக் குறிப்பையாவது, அல்லது பிறந்த வருஷம், மாதம், திகதி, கிழமை, நேரம், ஆண், பெண், பிறந்த ஊர் இவைகளைத் தெளிவாக எழுதி அனுப்பித் தற்கால பலன் அறிய ரூபா 1—00

ஜாதகக் குறிப்புக்கள் ரூபா 1, 2, 7, வரையிலும், ஜாதகங்கள் 10 ரூபாய் முதல் 150 ரூபா வரையிலும் எழுதிக்கொடுக்கப்படும்.

ஆரூடம் ஞாயிறு வியாழக்கிழமைகளில் சொல்லுவோம். கடித மூலமாய் அறிய விரும்புவோர் கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிட்டு எழுதவும். மூன்றுகேள்விகளுக்குட்பட ரூபா 1. மேற்பட்ட ஒவ்வொருகேள்விக்கும் சதம் 25 (அணா 4.)

மற்றும் விபரங்கள் கடித மூலமாயறிந்து கொள்ளலாம். பதில் வேண்டுவோர் முத்திரை (ஸ்டாம்பு) அனுப்புதல் வேண்டும்.

**விலாசம்:—**

க. கனகசபை
சோதிடர்,
அன்னசத்திரத்தடி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(Q. 101.)

## சுப்பிரமண்ய ஜோதிடம்.

இந்தியா தேசமெங்கும்
தலைமைபெற்றுப் பிரகாசிக்கும்
ஜோதிடாலயம் இதுவே

உங்கள் அதிஷ்டத்தை ஏன் தெரிந்துகொள்ளக் கூடாது. இன்றே யெழுதி உங்கள் அதிஷ்டத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் எதிர்காலப் பலனைப்பற்றிய 6 கேள்விகளுக்குப்பதில் எழுத ரூபா 1-00. மேல் தனிக் கேள்விகளுக்கு அணா 4. ஒருவருஷப் பலன் எழுத ரூபா 2-00. கடிதம எழுதும்போது உள்ள நேரத்தையாவது ஜாதகக் குறிப்பையாவது தெரியப்படுத்தவேண்டியது. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

## சர்வஜய வசீகரணி.

தாயித்தை 1-க்கு ரூபா 2—8—0

இது எல்லாவிதமான காரியங்களிலும் ஜெயமபெற்று வருவதுமன்றி செய்வினை போய் நல்வினை யுண்டாக்கும். எல்லாவிதமான காரியங்களிலும் அநுகூலப்படும்.

மானேஜர்,
ஸ்ரீ சிவசுப்பிரமணிய
ஜோதிட நிலயம்.
(Q 103) திருத்தணி, சித்தூர்ஜில்லா.

## காணிவிற்பனவு.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில், வண்ணார்பண்ணைகிழக்கு ஆனைப்பந்தியடியிலிருந்து காலஞ்சென்ற நமசிவாயம் வேலுப்பிள்ளையின் ஆதனத்தின் பேரில்.

உரிமைத் தத்துவ
வழக்கு இல. 6579.

வண்-கிழக்கு ஆனைப்பந்தியடி நமசிவாயம் வேலுப்பிள்ளை கைம்பெண் அன்னப்பிள்ளை
உரிமைத் தத்துவகாரி.

மேற்குறித்த வழக்கில் எனக்கு அனுப்பப்பட்ட கட்டளைப்படி, 1928-ம்ஆ ஜூலைமீ 29 ந் 9 மணிக்குக் கீழே விபரிக்கப்படும் காணியை அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்பேன்,

வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார் பண்ணை கிழக்கிலுள்ள "குத்தகைத் தோட்டம்" பா. கி. இல. 8-ம் கல்வீடும் அதைச் சேர்ந்தவைகளும், எல்லைகிழக்கு இராமநாதர் கந்தையாவின் ஆதனம், வடக்கு, ரோட்டிலிருந்து கிழக்கேயுள்ள இராமநாதர் கந்தையாவின் ஆதனத்திற்குப் போகும் ஒழுங்கை, மேற்கு ரோட்டு, தெற்கு மூத்ததம்பி வேலுப்பிள்ளைக்கும் மாணிக்கம்பெண் இராசம்மாவுக்கு முடைய ஆதனங்கள்.

யாழ்ப்பாணம், } V. A. துரையப்பா,
15—6—28. } வெந்திஸ் மேஸ்தர்.

Mi, 1234.

## சக்தி விரிய விருத்தி லேகியம்.

(1) தற்காலத்தில் அனேகவிதமான விரியவிருத்தி அவுடதங்கள் வெளிவந்திருப்பினும் அவற்றுள் எங்கள் சக்தி விருத்தி விரிய லேகியமே விசேஷகுணத்தைக் கொடுக்கும்.

(2) இந்த லேகியத்தின் குணமானது உஷ்ணம் முதலிய மேகரோகங்கள் ஜீவரத்னபீடமாகிய தேகத்தைத் தாக்குவதால் உண்டாகும் எலும்புருக்கி ரோகங்களையும் அரிதஸ்கலிதமென்னும் ஒர்வித ரோகினால் கேரிட்ட இப்புவியும் மலேரியாக் காய்ச்சலினால் (Malaria fever) சரீரம் மெலிந்து சாப்பாட்டில் பிரியமில்லாமல் தேக வெளுப்பு, பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், மலச்சிக்கு, பித்தக்கிறுதி, பித்த வாயவு, இருதயத்துடிப்பு, நரம்புத்தளர்ச்சி, கைகால் அசதி, விரைவாதம், ஆண்தன்மை காணுக்குகான் குறைதல் முதலிய துர்க்குறிகளையும் நீக்கி மனோற்சாகம், ஞாபகசக்தி, விரியவிருத்தி, தேகபலம், சரீராரோக்கியம், முதலியன உண்டாக்குவதில் மேன்மைவாய்ந்து, ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல பெலவீனத்திற்கும் இதற்கு நிகர் மருந்து கிடையாது.

(3) எங்கள் சக்தி விரிய விருத்தி லேகியத்தை 40 நாள் முறைப்படி உட்கொண்டால் தேகத்தில் ஏற்பட்ட உஷ்ணத்தை சமன்படுத்தி இரத்தத்தைச் சகல நரம்புகளிலும் ஓடச்செய்து சப்ததாதுகளுக்கும் வலுவை ஏற்படுத்தி அதிக வயதினாலும் பலஈனத்தினாலும் நரம்பு சுருங்குவதால் ஏற்பட்ட சகலவித சோர்வையும் புறக்கணித்து மனரம்மியமான இன்பரசவாழ்வைத் தரத்தக்கதோர் சித்தாந்த "மகா சஞ்சீவினி" என்றல்லவோ சொல்லலாம்! இச்சாபத்தியம்!!

| | | | |
|---|---|---|---|
| 1 ரூத்தல் மருந்து ரூபா | 10 | 00 | வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம். |
| ½ " " " | 5 | 00 | |
| ¼ " " " | 3 | 50 | |

**தந்திவிலாசம்:—** "Chambavee" Karainagar.

இங்ஙனம்,
பிஷக்வரர, டக்டர் எம் என். பிள்ளை ஏ. எம். ஏ. சீ
சிவ சாம்பவி ஔடதாலயம்,
காரைநகர், யாழ்ப்பாணம்.

குறிப்பு:—எங்கள் லேகியத்தில் ஓர்விதமான மிருகசத்துக்களும் லகிரிவஸ்துக்களும் சேர்க்கப்படவில்லை இவை காவரவஸ்துக்களைக்கொண்டே தயாரிக்கப்பட்டது மேலும் எங்களிடம் அனேகவிதமான ரோகங்களுக்கு மருந்துகள் தயார்செய்யப்பட்டிருக்கின்றன மருந்து வேண்டியவர்கள் வியாதியின் குணங்கள், வயது, உத்தியோகம், பாலகர் அல்லது ஸ்திரீ என்பதையும், கலியாணமானவரா இல்லையா; வியாதி ஆரம்பித்தகாலம், முன் வேறு எவ்வித வியாதிகள் ஏற்பட்டதென்றும் விபரமாக எழுதினால் எங்களால் தீர்க்கமுடியுமானால் அதற்குத்தகுந்த மருந்துகளை V. P. P. மூலமாய் அனுப்புவோம்; அல்லது நீரோதமான பிருத்தப்பத்தில் பதில் எழுதிவிடுவோம.

பதில் வேண்டுவோர்கள் 2 Ans. 6 Pies முத்திரையும் சிங்கப்பூர்மலாய்நாடு முதலியதொலைவாய் ராச்சியப் பகுதிகளிலிருந்த 20 cts. முத்திரையும் அனுப்பினால் விபரமாகப் பதில்எழுதப்படும்.

(Q 104)

## கௌரவ வேலர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரைநடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா 2 அணா 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(H 84)

## சமய சந்தேகம் ஏன்?

இந்தியாவிலும் மற்றுங் கீழைத்தேசங்களிலுமுள்ள அநேகர் உபயோகப்படுகின்றார்கள்.

ஏனெனில் அநேகமான மருந்துகளில் மிருகக்கொழுப்புச் சேர்த்திருப்பதால் அவர்கள் அதைப் பயங்காத்தோடு வெறுக்கின்றார்கள்.

மிருகக்கொழுப்புச் சிறிதுஞ் சேராத

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

என்னும் மருந்தினால் உண்மையான சுகத்தை யடையலாம்.
இந்துக்களாயினுஞ்சரி மகமதியர்களாயினுஞ்சரி
கிறிஸ்தவர்களாயினுஞ்சரி புத்தர்களாயினுஞ்சரி எல்லோரும் நம்பிக்கையோடு உபயோகிக்கலாம்.

எவ்வித வலிப்பையும் நோவையுந் தீர்ப்பதற்கு இந்தியாவில்கண்ட மருந்து.

எல்லாரசாயனசாலைகளிலும் மருந்துக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(Y. 51.)

இலங்கை
ஆயுள்வேத வைத்தியகல்லூரி
யாழ்ப்பாணம்.

மேற்படி கல்லூரியிற் சேர்ந்து ஆயுள்வேத வைத்தியத்தையும் ஒருங்கே கற்க விரும்புவோரும் ஆயுள்வேத சித்த வைத்தியத்தைமட்டும் (கொரஸ்போண்டன்சோஸ்) லிகிதகற்பனை மூலமாகக் கற்று டிப்பிளோமா என்னும் அரங்கேற்றப் பத்திரம் பெற விரும்புவோரும் தங்களது மனுப்பத்திரங்களை மேற்படி கல்லூரித் தலைவருக்கு அனுப்பி அக்கற்பனைக்குரிய விஷயங்களைத் தெரிந்துகொள்க. அனுபவித்தியுள்ள நசர்மார்களுக்கும் சுதேச வைத்தியர்களுக்கும் கற்பனையின் கால அளவு அவர்க்குரிய அனுபவசித்திக்குத் தக்கதாய்க் குறைக்கப்படும்.

இலங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரித்
(Q. 106.) தலைவர்.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவ௵
ஆனிமீ ௨௨உ திங்கட்கிழமை

## மிஸ்ரர் கரியும் கள்ளும்.

இலங்கைச் சட்டநிருபணசபை அயிரோப்பிய வியாபாரிமாரின் பிரதிநிதியாகிய கௌரவ மிஸ்ரர் M. J. கரியென்பவர் சென்றவாரம் யாழ்ப்பாணத்திற்குவந்தனர். அவர் யாழ்ப்பாணப் புகைரதஸ்தானத்தில் இறங்கியபோது மிஸ்ரர் A. P. தம்பையாவும் அவரைச்சேர்ந்த மதுக்கூட்டத்தவர்களும் மிஸ்ரர் கரியென்பவரைப்புகைரதஸ்தானத்தில் எதிர்கொண்டு உபசரித்து அழைத்துச் சென்றனர்; மதுக்கூட்டத்தார் தமக்குச்செய்த உபசரணையையிட்டு மிஸ்ரர் கரி மிகவும் பாராட்டிப்பேசித் துதிகூறினர்.

வடமாகாணப்பிரதிநிதிகளாயுள்ள சட்டநிருபணசபை அங்கத்தவர்கள் ஐவரும் இங்குள்ள சனங்களுடைய விருப்பத்தை உள்ளபடி எடுத்துக்காட்டவில்லையென்று மிஸ்ரர் கரி நமது பிரதிநிதிகளைக்குறை கூறினர்; யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் சாதிபேதமின்றி எல்லாரும் கள்ளுக்குடிக்க விரும்புகின்றார்களென்றும் மிஸ்ரர் கரி சொன்னார்; மதபானத்தால் முந்தி அரசினருக்குக் கிடைத்த பொருள்வருவாய் இப்பொழுது சில ஊரவர்களிடம் அநியாயமாகப்போய்ச் சேருகின்றதென்றும் மிஸ்ரர் கரி பகர்ந்தனர்; இந்த மது அபிமானக் கூட்டத்தவருள் ஒருவராகிய மிஸ்ரர் சந்தியாகுப்பிள்ளை யென்பவர் கரையூரைத் தரிசனஞ்செய்யும்படி மிஸ்ரர் கரியைக்கேட்க அவர் அதற்கு உடன்பட்டுப் போய்க் கரையூரைப்பார்த்தார்; அங்கே விசாரணை செய்தபொழுது கரையூரிலிருக்கின்ற ஆண்களும் பெண்களும் கள்ளுத் தங்களுக்கு வேண்டுமென்று மிஸ்ரர் கரிக்கு முறையிட்டார்களாம். சத்தோலிககர் சிலரும் கள்ளுக் குத்தகைகாரருந்தான் கள்ளுவேணுமெனக் கௌரவ மிஸ்ரர் இராசரத்தினமவர்கள் சட்டநிருபண சபையிற் சொன்னது கரிக்குச் சரியெனப் புலப்படவில்லையென்றும் இப்பொழுது தாம் ஆராய்ந்த அளவில் யாழ்ப்பாணத்தவர்களெல்லாரும் கள்ளுக்குடிக்கத்தான் விரும்புகின்றார்களெனப் புலப்படுகின்றதென்றுஞ் சொன்னார்; யாழ்ப்பாணத்தார் கள்ளுவிஷயமாக எவ்வகையான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கின்றார்களென்பதை நேரே கண்டுபோவதற்கே தாம் வந்ததாகவும் மிஸ்ரர் கரி புகன்றனராம்; இவர் கரையூரையும் பறையர்சேரியையும் பார்த்துக்கொண்டு சோனகர் தெருவுக்கு வந்து "உங்களுக்குங் கள்ளுத்தவறணை வேண்டுமோவெனக்கேட்டபோது" இஸ்லாமானவர்கள் தங்கள் மார்க்கத்தில் மதுபானம் விலக்கப்பட்டிருக்கின்றதென்றும் தங்களுக்கு கள்ளுத்தவறணைகள் ஒருபோதும் வேண்டியன வல்லவென்றுஞ் சொன்னார்களாம்.

மிஸ்ரர் கரி இங்கே வந்தபோது பிஷப் பாதிரியாரையும் வடமாகாணத்தலைவரையும் பட்டினபரிபாலனசங்கத்தலைவரையும் சந்தித்து இந்த மதுபான விஷயமாகப் பேசினராம். ஆனால் இவர்கள் என்ன சொன்னார்களென்பது வெளியிடப்படவில்லை. மிஸ்ரர் கரியின் செயலும் சொல்லும் யானையின் காலைமாத்திரம் தடவிப்பார்த்த பிறவிக்குருடன் யானை சுளகுபோல விருக்கின்றதென்று சொன்ன தன்மையைக் காண்பிக்கின்றன; கரையூரும் பறையர் தெருவுந்தான் யாழ்ப்பாணம் என்றும் மிஸ்ரர் A. P. தம்பையாவும், மிஸ்ரர் சந்தியாகுப்பிள்ளையும், பிஷப் பாதிரியாருந்தான் யாழ்ப்பாணத்திலுள்ள சனங்களின் அபிப்பிராயத்தை நன்கு உணர்ந்தவரென்றும் மிஸ்ரர் கரி நினைத்ததை பெரிதும் பரிதாபப்படத்தக்கதாம். இந்த கரியென்பவர் யாழ்ப்பாணத்தில் மதுபானவிஷயம் எப்படியிருக்கின்றதென்பதை உண்மையாக அறிய விரும்பினவராயிருந்தால் யாழ்ப்பாணத்தின் மற்ற இடங்களிலுஞ் சென்று ஆங்காங்குள்ள அபிமானிகளின் அபிப்பிராயத்தையுங் கேட்டறிய முயன்றிருப்பார்; மேலும் யாழ்ப்பாணப்பட்டினத்திலுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் எல்லாருக்குங் கள்ளுத்தேவை யென்பதை செய்வாரானால், சிலவாரங்களுக்குமுன் இப்பட்டினத்திற் கள்ளுத்தவறணை வேண்டுமென்பவர் சம்மதஞ்சொல்லலாமென அரசினர் நாட்குறித்துச் சம்மதங்கேட்டபோது கள்ளுத்தேவையானவர்கள் சம்மதஞ் சொல்லியிருப்பார்களே; கள்ளுத்தவறணைகள் திறக்கப்படுமே; கள்ளுத்தவறணை வேண்டுமென்று சம்மதஞ்சொன்னவர்களின் தொகை கைவிரல் மடித்து எண்ணக்கூடிய அத்தனை அற்பமாகவன்றோ இருந்தது. இங்குள்ள கள்ளுக்கூட்டத்தார் சிலரைக்கண்டும் கரையூரையும் பறையர்சேரியையும் மாத்திரம் பார்த்தும் யாழ்ப்பாணத்தில் மதுவேட்கை யுண்டோ இல்லையோவெனநிச்சயிப்பதே மிஸ்ரர் கரியின் நோக்கமாயிருந்தால் இவர் வீணே சிரமப்பட்டு இங்குவராமற் கொழும்பிலிருந்தே நிச்சயித்திருக்கலாமே!

## சிவஞான போதம்.

(முதற்பாகம்.)

வண்ணை, ஸ்ரீ லை. இராமநாதன் அவர்களால்
அநுவதித்துப்
பிரகடனஞ்செய்யப்பட்டது.

[39-ம் புத்தகம், 95-ம் இலக்க
இந்துசாதனப் பத்திரிகையின் தொடர்ச்சி.]

சூத்திரம்—௨.

*இரண்டாம் படம்—பெத்த உயிர்கள் மாறிமாறி இறத்தல் பிறத்தல் புரியும்.*

உயிரோடுகூடியிருக்கதூலதேகம் மாறி ஒடுங்க, உயிர் அதனை விட்டு நீங்கலே அதன் இறத்தல் எனறோம். இவ்வாறு இறந்த உயிர் மீளவும் பிறக்குமா? அன்றி இறந்து ஒழிந்தேபோகுமா? ஆராய்வாம். ஒடுங்கிய ஒவ்வொரு பொருளும் ஒடுங்கியவாறே கிடவாது மீளவுந் தோன்றுமென்றோம் இவ்வுலகமனைத்தும் ஒடுங்கியபின்னரும் மீளத் தோன்றுமென்றோம். இவ்விருஇறத் தோற்ற ஒடுக்கங்களின் பயன் ஆணவமல நீக்கமென்றுஞ் சொன்னோம் அதாவது சகல உயிர்களும் ஆணவமலத் தடையினின்றும் நீங்கும் வரை மேற்கூறிய இருநிறத்துத் தோற்ற ஒடுக்கங்களும் மாறிமாறிநிகழும். அதுபோல எந்த உயிரும் தன்னறிவைத் தடைசெய்துள்ள ஆணவமலத்தினின்றும் நீங்குமவரை, இறத்தல் பிறத்தல்களைப் பொருந்தும். ஆகவே, ஓர் உயிர் இறந்ததும், இறந்தொழிகதே போமென்பதன்று. அதன் அறிவைத் தடுத்துள்ள ஆணவமலம் நீங்குமவரை பிறந்திறந்துகொண்டே வரும். இவ்வுண்மை விளக்குதற்கே இச்சூத்திரம் வரவுபோக்குப்புரிய என்னாது இறந்த உயிர் மீளவும் வரும் என்பதை யுணர்த்தப் "போக்குவரவு புரிய" எனப் "போக்கு" என்பதை முன்வைத் தோதியது.

*மூன்றும் படம்—பெத்த உயிர்கள் தந்தம் இருவினைக்கேற்ப இறத்தல் பிறத்தல்களைப்புரியும்.*

ஓர் உயிர் இறந்ததும் அது கூடியுள்ள தூலதேகம் சூக்குமப் பொருள்களாய் மாறி அதற்குக் காரணமாயுள்ள சூக்கும தேகத்தில்ஒடுங்குமென்றோம். அச்சூக்கும தேகத்தினின்றும் மீளவும் ஓர் தூல தேகம் தோன்றுமென்றுஞ் சொன்னோம். மீளத் தோன்றுந் தூலதேகம் முன்னிருந்த தூலதேகமன்று. சூக்குமதேகம் ஒன்றேயாயிருந்தாலும், அதனினின்றுந் தோன்றுந் தூலதேகம் பிறிதேயாகும் வெவ்வேறேயாம் அன்றியும் ஒருயிர் பொருந்தியுள்ள தேகமும், வெவ்வேறாகவே காணப்படும். ஓர் உயிர் மனிததேகத்தையும், மற்றோருயிர் மிருகதேகத்தையும், ஓர் உயிர் பெலமான தேகத்தையும், மற்றோருயிர் பெலவீனமான தேகத்தையும், ஓர் உயிர் சுகதேகத்தையும், மற்றோருயிர் சுகவீனமான தேகத்தையும், இவ்வாறு பலவிதமாய்ப் பேதப்பட்ட சரீரங்கள் உயிர்கட் கிருக்கவுங் காண்கின்றோம். இதுவுமன்றி, ஒரு தேகம் அநேக வருடகாலம் அழியாதிருக்கவும், மற்றொன்று சில நாட்களிலும், சில கணங்களிலும் அழியவுங் காண்கின்றோம்.

இத்தேகங்களை இவ்வாறு பேதப்படத் தோற்றுவிப்பவன், ஏனையுலகப்பொருள்களைத் தோற்றுவிக்கும் முதல்வனே. இம் முதல்வன் இத்தேகங்களை யாதொரு நியதியின்றித் தன்னிட்டம்போல் இவ்வாறு பேதப்படத் தோற்றுவிப்பானோ? அன்றி யாதானும் நியதிப்படி தோற்றுவிப்பானோ? அப்படியானால், அந்நியதி தான் யாது? ஆராய்வாம். முதல்வன் தன்னிட்டம்போல உயிர்கட்குப் பேதப்பட்ட சரீரங்களைத் தோற்றுவிப்பான் என்பது பொருந்தாது. எல்லாவுயிர்களையும் ஒன்றுபோல் நடத்தும் முதல்வன், அவ்வுயிர்கள்பால் யாதுங்காரணமின்றிப் பேதஞ் செய்யான். ஆகவே இத்தேகங்களை நியதிப்படுத்துதற்கு ஏதுவான காரணமொன்றிருத்தல்வேண்டும். இந்நியதகாரணமே வினை எனப்படும்.

வினை என்பதற்குச் செயல் என்பது பொருள். ஒவ்வோருயிரும் தூலதேகத்தோடு கூடியுள்ளபோது பலவித செயல்களைச் செய்யும். இச்செயல்களை விருப்பு வெறுப்போடுஞ் செய்யும்; விருப்புவெறுப்பின்றியுஞ் செய்யும். விருப்பு வெறுப்பின்றிச் செய்யப்படுஞ் செயல்கள் தூலதேகத்தை மாத்திரம் தாக்குவன வாதலால், சித்துப்பொருளாகிய உயிரினைத் தாக்கா; விருப்பு வெறுப்போடு செய்யப்படுஞ் செயல்களோ, அறிவினையுந் தாக்குவன வாதலால், உயிர்களையும் பந்தித்து அவ்வுயிர்கள் இறக்குங்காலத்து, அவற்றின் சூக்குமதேகங்களின் தங்கிநின்று அவ்வுயிர்கட்குச் சுக துக்கங்களாகிய பலன்களை நியதியிட்டுக் கொடுக்கும். இவ்வாறு பலன்களைத் தந்தவை போக என்ற சிய வினையே அச்சூக்குமதேகங்களினின்றும் தனித்தனி தோன்றுந் தூலதேகங்களையும் அத்தூலதேகங்களோடு உயிர் கூடியகாலத்து அவ்வுயிர் அனுபவிக்கும் இன்பதுன்பங்களையும் நியதிப்படுத்தும். இவ்வினை இருதிறப்படும். அவை நல்வினை தீவினை என்பன. இவ்விரு வினைகளும் பிறவிகள் தோறும் உயிர்களால் ஈட்டப்பட்டு வருவனவாம். இவ்வினைகள் பொருளல்லவாயினும், உயிர்கள், இவ்வினைகளை இயற்றும்படி செய்வதான காரணப்பொருள் ஒன்றுண்டு. இக்காரணந்தான் மூலகன்மம் என்று சொல்லப்படும். இம் மூலகன்மமும் வியாபகமாயுள்ள சூக்கும சடப்பொருள். இதுவும் அநாதியேயுள்ளது. இது தன்னுள்ளே இரு வேறு கூறுகளாயிருப்பதால், இதனால் இயற்றப்படும் வினைகளும் இருவேறுவகை படும். இவ்வினைகட் கேற்பவே ஒவ்வோருயிரும் தேகத்தினை எடுப்பதும் விடுப்பதுமாம். அதாவது உயிரின் பிறப்புக்களை நியதிப்படுத்துவது அவ்வுயிரின் வினையே. அவற்றின் இறப்புக்களை நியதிப்படுத்துவதும் அதுவே. இவ்விறத்தல் பிறத்தல்களுக்கிடையே உயிர்கட்கு வரும் சுகதுக்கங்கட்கு நியதிகாரணமும் அதுவேயாம். இக்கருத்துக்களை உணர்த்தவே இச் சூத்திரம் 'போக்குவரவுபுரிய' என்றுமட்டும் ஓதாது "இருவினையிற் போக்குவரவு புரிய" என்றோதியது. (வரும்)

## சுப்பிறீம்கோடு.

கிறிமினல் விசாரணைச் சுப்பிறீம்கோடு 1928-ம் ஆண்டு ஜூலைமீ 16உ திங்கட்கிழமை, யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் ஆரம்பமாகி நடைபெறும்.

## கந்தவனம் மகோற்சவம்.

வல்லுவெட்டித்துறைக்குச் சமீபமாகப் பொலிகண்டி யென்னும் திருப்பதியிலுள்ள புராதனாலயமாகிய கந்தவனத்தில் இந்த ஆனிமீ 5உ திங்கட்கிழமை துவஜாரோகணமாகி மகோற்சவம் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. மேற்படிமீ 18உ ஞாயிற்றுக்கிழமை ரதோற்சவம் நிகழும். இப்பொழுது புதிதாயமைத்துக் கும்பாபிஷேகஞ் செய்யப்பெற்ற தெய்வநாயகி வள்ளிநாயகி சமேத ஆறுமுகசுவாமி மகாரதத்தில் எழுந்தருளி வருவரெனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## சுகாதாரப்பகுதி மேலதிகாரி.

இலங்கையிலே சுகாதார பரிபாலனத்திற்காக ஒரு மேலதிகாரியை நியமிக்க அரசினர் முயற்சி செய்கிறார்களெனத் தெரிகிறது. சுகாதாரத்தைப் பற்றிய விஷயங்கள் எழுதுவதும், அதைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்வதும், சுகாதாரத்தை விளக்குகின்ற படக்காட்சிகளை ஏற்படுத்தி நடத்துதலும், அதைப்பற்றிய சமாச்சாரங்களை எங்கும் பரவச்செய்தலும், பள்ளிக்கூடங்களோடு தொடர்புடையதாகப் பெற்றோரையும் உபாத்தியாயர்களையும் அங்கத்தவர்களாகக்கொண்ட சங்கங்களை ஏற்படுத்தலும், சுகாதாரத்தைப் பற்றிய பத்திரிகையை அச்சிட்டு வெளியிடுதலும் இந்த மேலதிகாரியின் கடமையாகும்.

## புகைரத விபத்து.

கம்பகாப்புகைரத ஸ்தானத்தில் வேலைசெய்யுங் கூலியொருவன், சென்ற வெள்ளிக்கிழமை சாயந்தரம், புகைரதம் ஓடுவதற்கு அசையும்பொழுது அதில் ஏற எத்தனித்தனன உடனே கால்தவறிக் கீழ புகைரதத்திற்கும் மேடைக்குமிடையே வீழ்ந்து நெரியுண்டான். தலையும் உடலும் வேறாயின.

## சட்டநிருபண சபை.

இச்சபையின் கூட்டம் சென்ற 22உ நடந்தபொழுது கௌரவ மிஸ்ரர் C. W. W. கன்னங்கரா அவர்கள், உதவி நன்கொடைப்பணம் பெறும் பள்ளிக்கூடங்களில், அவைகளுக்கு மானேஜராக வுள்ளவர்களால், அங்கே கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்கள் நீதியீனமாக நடத்தப்படுகிறார்களென்பதை விசாரணை செய்து அறிக்கையிடும்படி ஓர் சங்கம் நியமிக்கப்படவேண்டுமென ஓர்பிரேரணையை எடுத்தாண்டனர். இப்பிரேரணை அன்று முடிவுபெறாததால் தவணையிடப் பட்டிருக்கின்றது.

## அபினும் கஞ்சாவும் வைத்திருந்தவர்கள் அகப்பட்டமை.

சென்ற திங்கட்கிழமை யிரவு நாலுமணியளவில் கொச்சிக்கடை வழியாகக் கஞ்சாவும் அபினுங் கொண்டு ஆயுதபாணிகளாகச்சென்ற நால்வர் கொழும்பு போர்ட்காவல்காரனால் கண்டுபிடிக்கப்பட்டனர். மூன்றுபேர் மதிலால் ஏறி ஓடிவிட்டனர். கஞ்சாவும் அபினும் வைத்திருந்த நாலாம்ஆள், காவல்காரனின் அடியினால் கீழ்விழுந்தான. அவனிடத்தில் 6 இருத்தல்அபினும், 5 இறாத்தல்கஞ்சாவும்இருந்தன. அடியினால் காயம் ஏற்பட்டபடியால் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டான்.

## மார்க்கவிஷயமான பைத்தியம்.

ஊற்றனியிலுள்ள வீரன், தலனன் என்னும் இரண்டு தோட்டக் கூலியாளர்கள் பைத்தியகாரரெனவும் அவர்களைப் பைத்திய வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டுமெனவும் ஊற்றன டிஸ்திறிக்நீதிபதிகட்டளைசெய்திருந்தனர். இக்கட்டளையை விலக்கவேண்டுமென அரசினர் பறத்துநியாயதூரந்தரர் சுப்பிறீம்கோட்டு நீதிபதிக்கு விண்ணப்பஞ்செய்தனர். அவ்விருவரும் மார்க்கவிஷயமாகப் பைத்தியங்கொண்டவர்களேயொழிய உண்மையாகப் பைத்தியகாரரல்லர். வைத்தியருடைய அறிக்கையின்படி அவர்களை அடக்கி நடத்தவும் வேண்டுவதில்லை அவர்களை விடுதலைசெய்யும்படி நீதிபதி கட்டளையளித்தார்.

## களவாகக் கப்பலில் ஏறியமை.

அஸ்திரேலியாவிலிருந்து கொழும்புக்கு வந்துகொண்டிருந்த 'ஜேர்விஸ்பே' என்னுங் கப்பலில், களவாக ஏறிய எட்டுபேரால் அதிக சங்கடமிருக்கிறதெனவும், இப்பொழுது யாதேனுமொரு யுத்தக்கப்பல் வழியில் வந்துகொண்டிருக்கிறதோவென்பதை அறிவிக்கும்பொருட்டும், மேற்படி கப்பலிலிருந்து கொழும்புக்கு ஓர்செய்தி கிடைத்தது. காலிக்குவடக்கே 42 மைல் தூரமாகவும், கிழக்கே 1780 மைல் தூரமாகவும் அக்கப்பல் தங்கிநின்றது. இப்பொழுது வழியில் யாதேனுமொரு யுத்தக்கப்பல் வந்துகொண்டிருக்கவில்லையெனவும், விஷயம் மோசமானதாயிருந்தால் தெரிவிக்கும்படியும் கொழும்பிலிருந்து செய்தி யனுப்பப்பட்டது. அக்கப்பல் உதவிவேண்டி நிற்பின் இப்பொழுது துறைமுகத்தில் நிற்கும் கப்பலொன்று அனுப்பப்படுமென நம்பப்படுகிறது.

## களவாகச் சாராயங் கொண்டுவந்தமை.

மதுபரிசோதக உதவி அதிகாரியாகும் மிஸ்ரர் T. V. சரவணமுத்துவும் இரு காவலரும் சென்ற 20உ காலை, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் புகைரதத்தை எதிர்பார்த்துக்கொண்டு புகைரதஸ்தானத்தில் நின்றார்கள். புகைரதம் வந்துநின்றதும் அவர்கள் புகைரதவண்டிகளுள் ஏதிச் சாராயம் இருக்கிறதோ எனத் தேடிப் பார்த்தார்கள். தேடிப்பார்க்கும்பொழுது 71 போத்தல் சாராயம் இருக்கக் கண்டார்கள். ஒருமாசத்தில் ஒருமுறைக்குமேல் மன்னாரிலுள்ள கல்லதண்ணீர் றக்கத்திலிருந்து சாராயங் கொண்டுவந்தார்கள் என்னும் நியாயம் பற்றி அனுமதிச்சீட்டுவைத்திருந்த நால்வர் பிடிக்கப்பட்டார்கள். சாராயம் கொண்டுவந்த நால்வரும் அனுமதிச் சீட்டிலுள்ள திகதியை மாற்றி மாற்றி மதுபரிபாலன அதிகாரிகளை ஏமாற்றிவந்தனர். இவர்கள் பிணையில் விடப்பட்டிருக்கின்றனர்.

### பாலிய குற்றவாளிகளைப் பயிற்றுவதற்குப் பாடசாலை.

பாலிய குற்றவாளிகளைத் திருத்துவதற்கு எவ்வகையான வழிவகைகளை அனுசரிக்கப்படவேண்டுமென ஆலோசித்து அறிக்கைசெய்யும்படி அரசினரால் நியமிக்கப்பட்டசங்கம் தனது அறிக்கையை இப்பொழுது வெளியிட்டிருக்கின்றது. பாலிய குற்றவாளிகளுக்காக ஓர் பயிற்சிப்பாடசாலை ஸ்தாபித்தல்வேண்டுமெனவும், 16 வயது தொடக்கம் 21 வயதுக்குட்பட்டவர்களையே அப்பாடசாலையில் ஏற்றுக்கொள்ளவேண்டுமெனவும், அவர்கள் பள்ளிக்கூடத்திலிருந்து பயிற்சிபெறுங்காலம் இரண்டு வருஷத்திற்குக் குறையாதிருத்தல்வேண்டுமெனவும், அவர்களை எங்ஙனம் நடத்துவதெனபதைத் தீர்மானிக்கும் பொறுப்புச் சுப்பிறீம்கோட்டுக்கும் டிஸ்திறிக்கோட்டுக்குமே யிருத்தல் வேண்டுமெனவும், பாடசாலைக்கு அனுப்பப்பட்ட பாலிய குற்றவாளிகளுக்கு விசேஷமாகக் கிருஷிகமே பயிற்றல் வேண்டுமெனவும் சங்கத்தாரால் வெளியிடப்பட்ட அறிக்கையிற் கூறப்பட்டுள்ளன.

---

### சிறைச்சாலைக்கு அனுப்புதல் வேண்டும்.

பெண்டியமுல்லாவிலுள்ள றேய்மண்ட் என்பவரின் மனைவி பத்துவயதுள்ள பொடிகோனு என்னும் தனது வேலைக்காரச் சிறுமிக்குச் சூட்டுக்கோலால் சுட்டதினால் அச்சிறுமிக்கு 27 காயங்கள் ஏற்பட்டன. வைத்தியசாலையில் 25 நாட்களாகச் சிகிச்சை செய்யப்பட்டாள். இக்குற்றத்திற்காக ஷை றேய்மண்ட் என்பவரின் மனைவிக்குப் பொலிஸ் நீதிபதியால் ரூபா 100 அபராதமும், இரண்டு வருஷத்திற்கு நல்நடத்தைப் பிணையும் விதிக்கப்பட்டன. இத்தண்டனை போதியதல்லவெனவும் தண்டனையைக் கூட்டும்படியும் அரசினர்புறத்து நியாயதுரந்தரர் விண்ணப்பஞ்செய்தனர். சுப்பிறீம்கோட்டு நீதிபதி ஷை தீர்வையைவிலக்கி குற்றவாளிக்கு ஒருமாதம் வழியமில்லாச் சிறையும், ரூபா 100 அபராதமும் அவ்வபராதப்பணம் இறுக்கத் தவறினால் மூன்றுமாதக் கடூழியச்சிறையும் அவ்வபராதப்பணம் இறுக்கப்படின் ரூபா 50 காயமடைந்த சிறுமிக்குக் கொடுக்கப்பட வேண்டுமெனவும் விதித்தனர்.

---

### கடலில் மாண்டார்கள்.

பிரான்சில் கடலோரமாக ஒரு பிரெஞ்சுக்கார வாலிபன் தனது தாயுடன் உலாவிக்கொண்டிருக்கையில் தாயை அலை அடித்துக்கொண்டு போய்விட்டது. அதனைக் காக்க முயன்ற வாலிபன் தவறிக் கடலில் விழுந்துவிட்டான். அவனைக் காப்பாற்றுமாறு 19 வயதுசென்ற மேரி லெட்ஜா என்ற ஆங்கிலப் பெண் கடலில் குதித்தாள். வாலிபனும் பெண்ணும் கடலில் போய்விட்டார்கள். அவர்களைக் காப்பாற்றுமாறு ஒரு ஐரோப்பியன் சென்றதில் அவன் காயமடைந்தான். இந்தப் பரிதாபக் காட்சியைக் கண்ணாலே கண்டிருந்த அந்தப் பெண்ணின் தாய் துயரத்தால் கடலில் விழப் போனாள். அவளைப் பலர் சேர்ந்து காப்பாற்றினார்கள்.

---

### பசுவை வெட்டுவதற்குப் பதிலாகத் தலைகளை வெட்டினான்.

பஞ்சாப்பில் ஒரு சீக்கியன் ஒரு கோழியை முஸ்லிம்கள் அறுப்பதுபோலன்றி வேறுமாதிரியாக அறுத்துவிட்டதால் கோபமுற்ற சில முஸ்லிம்கள் அவனை மௌல்விகளிடம் அழைத்துக்கொண்டுபோனார்கள். அவர் ஒரு பசுவை வெட்டினால் கோழியைத் தவறான முறையில் அறுத்த பாவம் தீர்ந்துவிடும் என்றாராம். அதன்மீது ஒரு பசுவை வெட்டுமாறு அதனை முஸ்லிம்கள் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். நீளமான கிர்பான் வாள் ஒன்று கொடுத்தார்கள். உடனே அவன் பசுவை வெட்டுவதற்குப் பதிலாக ஒன்பது முஸ்லிம்களின் தலைகளை ஒவ்வொன்றாக வெட்டிவிட்டானும். குசரன்வாலா டிப்டி கமிஷனர்முன் வழக்கு நடக்கிறதாம்.

---

### கடிதற்கு விஞ்ஞாபனம்.

"ஐக்கிய மலாய்நாட்டு உயில் சாசிட்டு" என மகுடநாமமிட்டு அனுப்பப்பட்ட கடிதம் விளம்பரமாகவே பிரசுரிக்கப்படத்தக்கது.

### தேகவியோகம்.

தெல்லிப்பழை வாசரும் போதனா அம்மன்கோயிற் பூசகரும், தன்றுகம் அ. குமாரசுவாமிப்புலவரவர்களின் மருகரும், கல்லத்தென்று வைவசாஸ்திரசாரப் மு. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள் அவர்களின் ஏகோதரரும், வினிசிட்டி வைவவித்தியாசாலையில் சில காலம் ஆசிரியராயிருந்து, பல தன்மாணாக்கர்களுக்கு இலக்கிய இலக்கணங் கற்பித்தவரும் (சின்னத்தம்பி ஐயர்) எனச் சாதாரணமாக வழங்கப்பட்டவருமாகிய பிரமஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் நிகழும் விபவ ஆனி மீ அ (21—6—28) வியாழக்கிழமை காலை சுமார் அளவில் தேகவியோகமாயினர் என்னும் துக்கசங்கதியை அறிவிக்கின்றேன்.

—கடித.

---

### திருக்கோணமலை ஸ்ரீ சண்முகவித்தியாலயம் சிறுமிகள் கலாவிர்த்திச் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா.

---

நிகழும் விபவ ஆனி மீ (17—6—28) அ. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நாலுமணிதொடக்கம் ஸ்ரீசண்முகவித்தியாலய மண்டபத்தில் ஷை விழா நடைபெற்றது. ஸ்ரீமத் விபுலாநந்த சுவாமிகள் அக்கிராசனம் வகித்துத் தேவாரபாராயணத்துடன் ஷை கொண்டாட்டம் ஆரம்பமாயது. முதலாவதாக; ஸ்ரீமத் விபுலாநந்த சுவாமிகளுக்கு, ஸ்ரீ நா. கிருஷ்ணதாசபிள்ளை அவர்களாலும் புதிதாக வரவழைக்கப்பட்டிருந்த ஸ்ரீ டக்டர் இராசேந்திரம் பிள்ளை அவர்களுக்கும், ஸ்ரீமதி பண்டிதை பத்மாசனியம்மாள் அவர்களுக்கும் முறையே ஸ்ரீ சு. கைலாசபிள்ளை ஸ்ரீமதி கை. வள்ளியம்மாள் ஆகிய இருவராலும் மாலைகள் சூடப்பெற்றன. பின்னர், பண்டிதை ஸ்ரீமதி பத்மாசனியம்மாள் அவர்களைச் சிறுமியர் கலாவிர்த்திச் சங்கத்தார் பாடிய வாழ்த்துப் பா ஒன்று, காரியதரிசி ஸ்ரீமதி கை. வள்ளியம்மாளால் படிக்கப்பெற்றது. பின்னர் அடுத்தவருட உத்தியோகஸ்தர்களுள் அக்கிராசனராக ஸ்ரீ வல்லிபுரப்பிள்ளை முதலியார் அவர்களையும் உபதலைவர்களாக, ஸ்ரீமதி பண்டிதை பத்மாசனியம்மாள் அவர்களையும், ஸ்ரீமதி ச. நீலாயதாக்ஷியம்மாள், ஸ்ரீமதி அன்னபத்தினியம்மாள் பீ. ஏ. எல. டி. ஆதியோரையும், காரியதரிசியாக, ஸ்ரீமதி கை. வள்ளியம்மாளையும் உபகாரியதரிசியாக, திருமகள் நா. தேவகியம்மா, திருமகள் சி. சிவகாமிப்பிள்ளை என்னும் மாணவிதனாதிகாரியாக, ஸ்ரீ சு. கைலாசபிள்ளை உபாத்தியாயரையும் மற்றும் நிருவாகசபை அங்கத்தவராக ஸ்ரீ வே. செல்லையா உபாத்தியாயர்; ஸ்ரீமதி க. யோகாம்பிகையம்மாள், ஸ்ரீமதி சி. இரத்தினசவுந்தரம்மாள், ஆதியோரையும் ஒழுங்குசெய்யப்பட்டு அவர்களின் பெயர்கள் காரியதரிசியால் சபையில் வாசிக்கப்பெற்றன. பின்பு பாடசாலைச் சிறுமியரால் சங்க வாழ்த்துப்பாவும் சில மனனபாடங்களும் சில கதைகளும் ஒரு ஆங்கில சரித்திரமும் சபையிலே பேசப்பட்டன. இவற்றுள் சில அபிநயமாகச் சபையிற் காட்டப்பட்டன.

அதன்பின்னர் ஸ்ரீமதி பண்டிதை பத்மாசனியம்மாளைப்பற்றிச் சபாநாயகர் அவர்கள் சபையோர்கள் நன்கு அறிந்துகொள்ளச் சில குறிப்புரைகள் கூறி, ஸ்ரீமதி பத்மாசனியம்மாளையும் சில வசனங்கள் பேசும்படி கேட்டுக்கொண்டார்கள். ஸ்ரீமதி பண்டிதைபத்மாசனியம்மாள் ஸ்ரீமத் விபுலாநந்த சுவாமிகளுக்கும் சபையோருக்கும் தமது ஸ்துதியையும் நன்றியறிதலையும் வெளியிட்டுப் பல நல்லுரைகள் போதித்த ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்பு ஸ்ரீமதி ச. நீலாயதாக்ஷியம்மாளாலும், ஸ்ரீ க. கனகசேகரம்பிள்ளை அவர்களாலும் சபையில் நடந்த விஷயங்களையிட்டுக் குறிப்புரைகள் கூறப்பட்டன. திரு. இந்து ஆங்கில வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர் திருவாளர் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களாலும், சிறுமிகள் கலாவிர்த்திச்சங்கமானது மாதர்ஐக்கியசங்கத்திற்கு ஓர் பயிற்சிச் சங்கமாக இருக்கிறதென்றும், சிறுமியர் கலாவிருத்திச்சங்கம் விருத்தியடையவே மாதர்ஐக்கியசங்கமும் வருங்காலத்தில் மேன்மையடையுமென்றும் நன்கு விளங்கப்பேசி ஸ்ரீமதி பண்டிதை பத்மாசனியம்மாளதும், ஷை அம்மாளின் தலைவர் ஸ்ரீ டக்டர் இராசேந்திரம்பிள்ளை அவர்களதும் கல்வித்திறனையும் அவர்கள் இருவராலும் நமக்குக் கிடைக்கக்கூடிய பல உதவிகளையும் பற்றிப் பேசி, ஈற்றில் அகப்பிணியாகிய அஞ்ஞானத்தை அகற்றி நல்லறிவூட்டக்கூடிய ஸ்ரீமதி பண்டிதை பத்மாசனியம்மாளும் புறப்பிணிகளாகிய பல நோய்களையும் சூரியனைக்கண்ட பனிபோல நீக்கி நல்ல சுகத்தைத்தந்து சந்தோஷமடையச் செய்வதற்கு ஸ்ரீ டக்டர் இராசேந்திரம்பிள்ளை அவர்களும் ஒருசேர இருக்கும்பொழுது நமக்கு யாது குறையுண்டு என்ற கருத்தமையப் பேசி முடித்தனர்.

ஈற்றில் ஸ்ரீமத் விபுலாநந்த சுவாமிகள் தமது கருத்துக்களைக் கூறிச் சபையோரை மகிழச்செய்தார்கள். எட்டுமணிவரையில் கூட்டம் நிறைவேறியது. சபையோருக்குத் தாம்பூலம் சந்தனம் பன்னீர் ஆதியன வழங்கப்பட்டன. ஏறக்குறைய 150 சிறுமியர்களும் இருநூற்றுக்கு மேற்பட்ட ஆடவர்களும் பெண்மணிகளும் பாடசாலை மாணவரும் சமுகமளித்தனர்.

—கடித.

### விதைநெல்; வைக்கோல்.

5 மாச நெல்லு; விதைப்புக் கேற்றது. சோதித்துச் சகாயமான விலைக்கும், வைக்கோல் கல்லதாய்க் கத்தைகளாய்கல்லாயேற்றப்பட்டதுமானது. றயில்வெட்டிக்கணக்காயச் சகாயமாய்க் கொடுக்கலாம் இதையிட்டுவிபரம் சுதுமலைவடக்குப் பள்ளிக்கூடத்திற் கணித்தாயுள்ள சிதாருமமந்திரம் என்னும் வீட்டில் விசாரித்துக்கொள்ளலாம்.

சுதுமலை சிதாருமமந்திரம், இங்ஙனம்,
22-6-28. தி. சின்னையா,
(Mis 1237.) டாக்குத்தர்.

---

### கல்லிற்குப்பதில் அம்மியன்றிக் குழவியல்ல.

94-ம் இலக்க இந்துசாதனப் பத்திரிகையில் அம்மியோடு குழவியும் வைக்கவேண்டுமென்று எழுதப்பட்டிருந்தது.

எத்தேவரால் எவ்விஷயம் நடைபெறவேண்டுமோ அத்தேவரால் அவ்விஷயம் நடைபெறும். அதுபோல் எக்கருவியால் எத்தொழில் நடைபெறவேண்டுமோ அக்கருவியால் அத்தொழில் நடைபெறும்.

மணப்பெண் மிதிப்பதற்கு ஒருகல் புதிதாயமைப்பதிலும் சுலபமாய் ஒரு அம்மிக்கல்லை வைத்துவிட்டால் அது கல்லென்பதை மாற்றிவிடுமோ?

குழவிவைத்தல் சாஸ்திரத்தில் சொல்லப்படவில்லையென்று கூறியதேயன்றிக், கண்ணாடி, கம்பளம், முதலியவைபோல அலங்காரத்தின் பொருட்டுக் குழவியும் வைத்தல் தவறு என்றால், ஒன்றல்ல நாலு குழவியை வைத்தாலுந் தவறென்று சொல்வாரில்லை.

இன்னும் நாலு குழவிகளைப் பட்டுவஸ்திரம், பூமாலை முதலியவற்றாலலங்கரித்து அம்மிக்கு நாற்புறத்திலும் வைத்தால் அது சோபையாகாதா? பலகுழவிகளை வைத்தால் சாக்ஷியும் பலத்துவிடுமே!

பிராமண வீட்டில் நடக்கும் வைதிகக் கிரியைகளில் அரசாணிப்பீடம் முதலியவற்றை வைக்க இடமில்லாமையாலோ, அல்லது இலக்ஷணக்குறைவென்றோ நீக்கிவிட்டார்கள்!

இந்தியாவில் நடைபெற்றுவரும் ஆன்றோர் அனுசரணையை மறந்தவையெல்லா.

த. சிவசாமிக்குருக்கள்,
வில்லூன்றி,
22—6—28. திரிகோணமலை.

---

### இன்னுமொருமுறை!

போயக்கி யெடுத்தது.

By D. Swiveller.

லண்டன் நகரத்து ஒரு "கிளப்"பிலுள்ள அறையில் ஒருசிலர் கூட்டமாயிருந்து குளிர்காய்ந்துகொண்டிருந்தபொழுது, அக் கூட்டத்திலுள்ள ஒருவர், "இந்தச் சீவியத்தை இன்னுமொருமுறை சீவிக்கக்கூடிய தத்துவம் உங்களுக்கு இருந்தால், இரண்டாம் முறையும் இப்படிப்பட்ட ஜீவியத்தை யடைய விரும்புவீர்களா?" என்று கேட்டார்

* * *

அக்கூட்டத்தி லிருந்தவர்களில் ஒருவர் பிரசித்திபெற்ற நியாயதுரந்தரர். மற்றொருவர் அரசாங்கவிஷயத்தில் ஈடுபட்டு உழைப்பவர். இன்னொருவர் எல்லாராலும் புகழப்பட்ட பாதிரியார். வேறொருவர் பத்திராசிரியர். இவர்களில் ஒருவரைத்தவிர மற்றவரெல்லாம் "வேண்டாம், போதும்" என்றே விடையளித்தனர்.

* * *

"போதாது" என்றவர் பாதிரியாரல்ல. அவர் தனது ஜீவியம் எப்படிப்பட்டதென்றும், மற்றையோரது ஜீவியம் எத்தன்மையதென்றும் ஊன்றி அறிந்தவர். ஒருமுறை நாடகம் பார்த்தவர் இனிப் போதும் என்றே அபிப்பிராயங் கொண்டார். இன்னுமொருமுறை அதே நாடகத்துக்குப் போக அவர் விரும்பவில்லை.

* * *

இந்தக் கேள்வி நேற்றுமுளைத்ததொன்றல்ல. சரித்திர காலத்திற்கும் முன்னரே நிகழ்த்தப்பட்டது. ஆதாம் உடன் பிறந்தது' யுகங்கள் யுகங்களாக, குளிர் காய்ந்தவறையிலும், வெயில் நிறைந்த வெளியிலும், உஷ்ணாதித்திலும் மலைக்குகையிலும் இவ்வினா உதித்தது. அங்கங்கே பதிலும் பெற்றது.

* * *

எங்களது ஜீவியமத்தியிற்றான் இவ்வாசங்கை பிரசன்னமாகின்றது. வாலிபதசையில் எங்களது ஜீவியத்தைப்பற்றிய கேள்விகள் எங்களைப்பாதிக்க நாங்கள் விடுவதில்லை. காலையெல்லாம் வேகமாக நடந்து மத்தியானத்தில் மலைச்சிகரத்தை யடைந்து இனி வரப்போகிற இறக்கத்தைக் கண்ணுறும்பொழுது தான் "இன்னுமொருமுறை இவ்வழியைத் திரும்பி நடக்கலாமா" என்ற வினா நெருங்கும் அழைப்பாரின்றித் தானாகவே யெங்கள்வாயில் வந்துவிடுகின்றது.

* * *

இக்கேள்வி கேட்பதனால் நாங்கள் செய்த பிரயாணம் சுகமற்றதென்பது கருத்தல்ல. வழியோ கொஞ்சத்தூரமாயிருக்கிறது. அவ்வளவு அழுத்தமானதுமல்ல. சிற்சிலவிடங்களிற் பருக்கைக்கற்கள் உறுத்தியமையால் பாதங்கள் சற்றுப் புண்கொண்டன; நாங்களும் சிறிது களைப்புற்றோம். ஆகையாற் களைப்பாறவேண்டுமென்னும் அவா மனசில் உதித்துவிட்டது. இஃதன்றி வேறொன்றுமல்ல.

* * *

இவ்வண்ணமே இயற்கைமாதா மரணத்தின் கொரோத்தைக் குறைத்து எங்களை அதனுடன் உறவாக்குகிறாள். தனதுகுழந்தைகட்கு ஜீவியமென்னும் விநோத விளையாட்டுகளைக் காட்டிவிட்டாள். உலகம் முழுவதற்கும் ஏகசக்கிராதிபதியாக்கினாள்; வீரதீரத்தை நல்கினாள்; எல்லாவிதமான இன்பத்தையும் சகலவின்பத்தையும் [illegible] வானத்தின் வனப்பையும், வானின் கவின்களையும், மலையின் பொலிவையும், கடலின் பெருக்கையும் தெரிவித்துவிட்டாள். எவரும் இன்பதுன்பம் தெவிட்டப்பெற்று, களைப்புற்று, "இனிப் போதும்" என வாய்விட்டனர். விடலை மரணத்தை விட்டான் அன்னை.

* * *

மரணத்தீர்ப்பை நாங்கள் நுரைகூறாது ஏற்றுக்கொள்ளுகிறோம். அத்தீர்ப்பை மாற்ற எங்களுக்குப் பிரியமேயில்லை. அன்றியும் அஃதோர் இயலாத காரியம். மரணம் அளிக்கும் இயலாறுதல் எங்கட்கு மிகவுந் தேவையானதென்று ஒப்புக்கொள்ளாதார் யார்?

* * *

ஆனால் இவ்விஷயத்தை "இந்தச் சீவியத்தில் ஏதும் பிரயோசனமுண்டா?" என்று பாமரஜனக்கூட்டம் கேட்கும்வினாவோடு கலந்துகொள்ளக்கூடாது. இக்கேள்வியைக் குளிர் காய்ந்துகொண்டிருந்த அவ்வறிஞரைக் கேட்டிருந்தால் அவர்கள் நகைத்து "ஆம்" என்று விடையளித்திருப்பார்கள். இச்சீவியம் களிப்பை யளிக்கும் விசித்திர சம்பவம் என்று அவர்கள் எல்லாரும் அறிவார்கள். இச்சீவியத்தின் என்னவோர் பாகத்தையேனும் இழக்க உடன்படிருக்கமாட்டார்கள். இதுவே அறிவாய்ந்தவரின் அபிப்பிராயம், அனுபவம்.

* * *

துக்கம் நிறைந்து களைப்புற்ற நேரங்களில் "நாங்கள் ஏன் பிறந்தோம்" என்று தங்களைத் தாமே சபித்து நாங்கள் பிறந்த வேளையைத் திட்டுவதும் உண்டு. ஆனால் அச்சாபம் தோன்றியவுடனே மறந்துபோகப்படுகின்றது. "ஸ்விவ்ற்" (Swift) என்னும் பிரசித்திபெற்ற ஆங்கிலேயன் தான் பிறந்த தினத்தை ஒரு துக்கநாளாய் மதித்தாரென்று அறிகிறோம். ஆயினும் இவரது மனசு நோயுற்றதென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்வார்கள். மற்றையோரின் மகிழ்ச்சியில் இன்புறாதவன் ஜீவியத்தின் சுகத்தை யறியான். அவனுக்கு இச்சீவியம் முன் மிதிதடியில் நடத்தலை நிகர்க்கும்.

* * *

இச்சீவியம் துக்கசாகரம் என்று பிரசங்கஞ் செய்பவர்கள் இடைக்கிடைவருங் கஷ்டங்களுக்குஎவ்வளவு கெட்டித்தனமாய்த் தப்பிக்கொள்கிறார்கள்! இந்தச் சீவியத்திலே என்னளவுஞ் சுகமில்லையென்று இடைவிடாது படிப்பித்துக்கொண்டிருந்த தத்துவசாஸ்திரி யொருவரை எனக்குத் தெரியும். ஒவ்வொருநாளும் காலையில் எழுந்தவுடன் "இவ்வுலகத்தில் நானேன் பிறந்தேன்" என்று அவர் சொல்லாத நாள் இல்லை. ஆனால் இவர் ஒருநாட் சாயந்தரம் வசதியாய் இவ்வுலகவாழ்க்கையை நீக்கக்கூடிய வோர் சந்தர்ப்ப மேற்பட்டது. இவர் பிரயாணஞ் செய்த கப்பல் தாழவேண்டி நேரிட்டது. ஆனால் அத்தருணம் கப்பலின் பாய்மரத்தை இறுகக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "ஐயோ! கடவுளே, என்னை இவ்வேளை காப்பாற்றும்" என்றிரந்து வேண்டுபவராய்க் காணப்பட்டார். கடைசியில் அவர் காக்கப்பட்டார். இன்றுவரைக்கும் "ஏன் பிறந்தேன்" னென்று வாய்விட்டலறுகிறார்.

* * *

காரியமென்னவென்றால், இவ்வழியால் ஒருதரம் வந்ததைப்பற்றி நாங்கள் ஒருவராவது உண்மையாய்த் துக்கப்படவில்லை. ஆனால் இன்னும் ஒரு முறை இதே வழியால் பிரயாணஞ் செய்வது யாருக்காவது இன்பத்தைக் கொடுக்குமோவென்பது பெரிய சந்தேகம். ஒருவேளை சிலர் "இப்பொழுது எனக்கிருக்கும் அறிவோடு, அனுபவத்தோடு இனிமேல் இச் சீவியத்தை யடைந்தால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கு" மென்று சொல்லக்கூடும். அவ்விதம் அபிப்பிராயப்படுவோர் வாழ்க்கையின் சுவையை யறியாதோரே. புஷ்பத்திலுள்ள மணத்தை விட்டு வடிவையே நாடுவோரைப்போல, இவர்கள் வாழ்க்கையிலே சிரேஷ்டமான பகுதியை நீக்கி, சாரமற்றவோர்பாகத்தையே அதுவென மருளுகின்றனர்.

* * *

வாழ்க்கையின் அதிசயங்களே அதைவிநோதமாக்குகின்றன. பிறந்த ஒவ்வொருவரும் பாலப்பருவம் பெற்று முதுமை வரைக்கும் ஜீவித்துப் பின் அறுவயசு பூரணமானவுடன் இறப்பதானால் ஜீவியம் நாங்கள் கவனிக்கக் கூடியதொன்றாய் இருக்க முடியாது. எதிர்பாராததொன்று நிகழ்தலாலும், அதிசயங்கள் விரவியிருத்தலாலும், நீதியும், அநீதியும், போர் புரிதலாலும், சுகமும் துக்கமும் சுழலும்சக்கரம்போல் இருத்தலாலுமே இம்மனுஷ வாழ்க்கை எங்களுக்குத் தகுந்ததொன்றாகின்றது.

* * *

வாலிபகால முழுவதும் யுத்தத்திலே ஈடுபட்டுப் பல தேசங்களையும் புகழையும் பெற்று வயசு தளர்ந்த நிலைக்குவந்தவோர் உத்தமபோர்வீரன் ஒருநாள் ஒரு மலைச் சிகரத்திலிருந்து திரும்பிப் பார்த்தவண்ணமாய் இருந்தான். இதைக்கண்ட வேறொருவன், "ஏன், நீ இன்னுமொருமுறை சமர்க்களம் புகுந்து சண்டைபுரிய விரும்புகிறாயா? இன்னும் தேசங்களைச் சூறையாடி, உனது கீர்த்தியையும் சேர்த்தியையும் இன்னும் ஒருமுறை நிலைநாட்டுவது உனது நோக்கமா?" என்று வினவினான். அதற்குப் போர்வீரன், "எனது வெற்றிகளெல்லாம்முடிந்தன; போரில் வாகை சூடுதலால் வரும் இன்பத்தைமற்றையோர்க்குவிடுகிறேன். நடந்த சம்பவங்களெல்லாம் எனக்குக் கனவாயின; எனது வழி இதோ எனக்கு முன்பாக இருக்கின்றது. அப்பாதையால் இறங்கி நடப்பேன்" என்று விடை பகர்ந்தான். இவன் "இனிப் போதும்" என்றே அபிப்பிராயங் கொண்டான்.

## விளம்பரம்.

182 கருங்காலி, முதிரை, பாலை, முதலிய இன்னும்பல சாதிமரங்கள் அனுராசபுரம் புகைரதஸ்தான மரக்காலையில் 1928-ம்ஷ ஆடிமீ 18-ம்உ காலை 9 மணிக்கு அனுராசபுரம் உதவி வனபரிபாலனாவர்களால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஏனைய விபரங்களை 1928-ம்ஷ ஆனிமீ 22-ந்உ வெளிவந்த 7650-ம் இலக்க கெசற் பத்திரிகையிலுள்ள விளம்பரத்திற்காணலாம்.

J D SARGENT,
CONSERVATOR OF FORESTS.
வனபரிபாலனர்.

வனபரிபாலனர் கந்தோர்
கண்டி, 19–6–1928.
(G. 920.)

## அறிவித்தல்.

இப்போ கோண்டாவில் கிழக்கிலிருக்கும், காத்திகேசர் சின்னையாவாகிய நானும் எனது பெண்சாதியும் இவ்வூர் இளையதம்பி சுப்பிரமணியமென்பவர் பேரில் நம்பிக்கைக்காக எழுதிவைத்திருந்த காணி, கருவேட்டி காணி கோவிலருகிலிருப்பது, இக்காணியைச் சுப்பிரமணியம் ஈடுவைப்பதற்கல்லது அறுதி விற்கிறதாக விருந்தால் எவராதல் ஏற்கப்படாதென்றும் எந்த நோத்தாரிசுவாவது எழுதப்படாதென்பதை யறியத்தருகிறேன்.

இங்ஙனம்,
காத்திகேசர் சின்னையா.

18—6—1928,
கோண்டாவில் கிழக்கு.
(Mis. 1236)

## அறிவித்தல்.

1926-ம்ஷ ஒக்டோபர்மீ 1-ந் திகதிக்கு முன்னர் உதவிபெறும் பாடசாலை யொன்றில் சேவைசெய்து ஆணாயிருப்பின் 55 வயதிலும், பெண்ணாயிருப்பின் 50 வயதிலும் இளைப்பாறிய எல்லோரும், 1928-ம்ஷ ஜூலைமீ 31-ந் திகதிக்குப் பிந்தாது வித்தியாதிகாரியவர்களுக்குப் பின்வருவனவற்றைப் பற்றிய அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

(1) முழுப்பெயரும் தகைமைகளும்.
(2) சேவையின் முழுப்பதிவு.
(3) சேவையின் கடைசிவருடத்தில் பெற்ற வேதனம்.

ஆசிரியன் சேவைசெய்த ஒவ்வொரு பாடசாலையிலும் சேர்ந்த திகதியையும், பின் விட்டு நீங்கின திகதியையும் சேவையின் பதிவில் குறிக்கவேண்டும்.

1926-ம்ஷ ஒக்டோபர்மீ 1-ந் திகதிக்கு முன்னர் இளைப்பாறிய ஆசிரியர்களுக்கு உபகாரச் சம்பளங் கொடுக்க வேண்டுமென்ற உத்தேசத்தை அரசினர் அங்கீகரிப்பின் அவர்கட்கு இதனால் எவ்வளவு கடன் நேருமென்பதை நிச்சயப்படுத்துவதற்காகவே இவ்வறிக்கை தேவைப்படுகின்றது. இதனால் இவ்வுத்தேசம் அங்கீகரிக்கப்படுமென்பது அர்த்தமல்ல.

எல். மெக்றே,
வித்தியாதிகாரி.

(G. 918)

## சிரார்த்தம் மூடவழக்கமாம்.

சைவசமயத்திற் பிறந்தும், சைவராயிருந்தும் சிற்சிலர், தற்காலத்தில், சைவக்கிரியைகளுட் சிலவற்றை மூடவழக்கங்களென்று சொல்லத் தலைப்பட்டு விட்டனர். முன்பின் யோசியாது இவர்கள் இப்படிச்சொல்வது மூட்டாட் டனமேயாகும். சிரார்த்தம் செய்வது மூடவழக்கமென எனது நண்பர் ஒருவர் கூறுகின்றார். எந்தத் தபாற்கந்தோர் மூலம் இந்தப் புரோகிதர்கள் மேல் உலகிலிருப்பவர்களுக்கு உணவு அனுப்புகிறார்களென்று அவர் கேட்கிறார். பிறரை யேமாற்றிப் பிழைப்பதற்காகப் பிராமணரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஏற்பாடு என்று அவர் கூறுகின்றார். அவர் கூற்றுக்களை இவ்வளவில் விடுத்துச் சிரார்த்தம் என்பது என்ன, அது ஏன் செய்யப்படவேண்டும், அது மூடவழக்கந்தானா என்பதை யாராய்வாம்.

சைவக்கிரியைகள் பூர்வம் அபரம் என இரண்டுவகைப்படும். தீட்சை, விவாகம், முதலியன பூர்வக்கிரியைகளாகும். அந்தியேட்டி, சபிண்டீகரணம், சிரார்த்தம் முதலியன அபரக்கிரியைகளாகும். இக்கிரியைகளைப் பற்றிச் சைவாகமங்கள் நன்கு விபரித்துக் கூறும். இச் சைவாகமங்கள் ஈசுரவாக்குகளாகும். "வேதமொடாகமம் மெய்யாம் இறைவனூல்" என்றார் திருமூல நாயனார். இத்திருமூல நாயனார் எம்போன்றவரல்லர்; ஓராண்டு வரைக்கும் யோகத்தமர்ந்து, அவ்வோராண்டு முடிந்தபின், கண்விழித்து ஓர் திருவிருத்தம் சொல்வர். அப்படி மூவாயிரம் ஆண்டு யோகத்திருந்து மூவாயிரம் திருவிருத்தங்கள் பாடியருளியவர். ஒரு விநாடியேனும் கண்மூடி மௌனியாகி, பஞ்சப்புலன்களையுமடக்கி யோகத்திருக்க வலியில்லாதவர்களாகிய நாமா, அத்திருமூல நாயனாரால், "மெய்யாம் இறைவனூல்," என்று கூறப்பட்ட ஆகமங்களில் நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் சிரார்த்தம் முதலிய கிரியைகளை யுணவிட்டறிய வல்லம், அந்தோ, நம்மினும்

சில அறிந்தனமென்பது நகையே! வேதாகமங்கள் ஈசுரவாக்கென்ற நம்பிக்கை யில்லாதார் எதைச் சொன்னாலும் நம்பவே மாட்டார்கள், எதற்கும் குதர்க்கமே பேசுவார்கள்.

சைவசமயம் என்று உற்பத்தியானதோ அன்றே இக்கிரியைகளும் உற்பத்தியாயின. சைவசமயம் உற்பத்தியாகிச் சிலவாண்டுகள் கழிந்தபின்னர் கிரியைகள் தோன்றினவல்ல. அல்லது, பிறமதஸ்தர்கள் செய்ததுபோலக் காலத்துக்குக் காலம் சபைகூட்டி மாற்றப்பட்டவையல்ல. இக்கிரியைகளை விதித்தவர்கள் எம்போன்ற குறுகிய அறிவும், குறுகிய வாணாளு முடையவர்களல்லர். அவர்கள் தவத்தினாற் சிறந்த முனிவர்கள் என்பதையும் மனதிலிருத்தல் வேண்டும். எத்தனையோ பல்லாயிரக்கணக்கான வருஷங்களாகச் சைவ உலகத்தில், இந்தச் சிரார்த்தம் என்பது, கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. எத்தனையோ அறிவாளிகளும், கவிவாணர்களும், தெய்வப் புலமையாளரும் இதையனுசரித்தே யிருக்கின்றனர். ஆறுமுக நாவலராதியாம் சமீபகாலப் பெரியோரும் இதை வற்புறுத்தியே போந்தனர். ஏன்? தற்காலம் வசிக்கும், ஸ்ரீமத் சிவபாதசுந்தரம் B. A. முதலிய சமயஞானம் பெரிதுமுடைய அறிஞரும் சிரார்த்தம் செய்யப்பட வேண்டுமென்றே கூறுகின்றனர். சிரார்த்தம் செய்வது மூடவழக்கமென்று கூறுவாரை நோக்கி, இத்தனை காலமாக இத்தனை பெரியாரெல்லாருமதனை யங்கீகரித்திருக்கிறார்களேயென்று சொன்னால், "அத்தனைபேருமங்கீகரித்ததனால் நாமுமங்கீகரிக்க வேண்டுமோ. ஏன் அவர்கள் அவ்விஷயத்தில் தவறிவிடக் கூடாது," என்று விடையிறுத்து விடுகிறார்கள். "இல்வாழ்க்கை" என்னும் அத்தியாயத்தில், திருவள்ளுவ நாயனார், "தென்புலத்தார் தெய்வம், விருந்து, ஒக்கல், தான், என்றாங்கைம் புலத்தாறோம்பல்" என்று கூறியிருக்கின்றாரே! "தென்புலத்தார்," என்பது என்ன? தென்புலத்தாருக்குச் செய்யவேண்டிய கடனென்ன? சிரார்த்தம் செய்வது திருவள்ளுவருக்கு மூடன்பாடல்லவா? திருவள்ளுவர் தெய்வப்புலமை யாளரல்லவா? பல பிறபாஷையாளராலும் வியக்கப்படுகிறதும், தமிழகத்துக்கு ஓர் பொக்கிஷம் போன்றதுமாகிய திருக்குறளிலே, சிரார்த்தம் செய்யவேண்டுமென்ற மூடவழக்கத்தைத் தெய்வப்புலமை யாளராகிய நமது திருவள்ளுவர் நுழைத்துத் தமது நூலின் பெருமையைக் குறைத்து விடுவாரா? நக்கீரரை யுள்ளிட்ட சங்கப்புலவர்கள் திருக்குறளுக்குச் சாற்றுகவி கொடுத்திருக்கிறார்களே! அந்த நாற்பத்தொன்பது சங்கப்புலவர்களுள் ஒருவராவது, சிரார்த்தம் செய்யவேண்டுமென்ற மூடவழக்கத்தைத் திருவள்ளுவர் தமது நூலில் சொருகியிருப்பதை யறியாது போனார்களா! சிவபெருமானுடைய கவியிற் குற்றம் பிடித்த நக்கீரரும் அந்த மூடவழக்கத்தைக் கண்டுபிடியாது விட்டு விட்டாரே.

சிரார்த்தம் செய்வது மூடக் கொள்கையானால், விபூதி பூசுவதும் உருத்திராட்ச மணிவதும் மூடக்கொள்கைகளாகவேண்டும். பசுமாட்டின் பீயையெடுத்து வெயிலிற் காயவைத்து நெருப்பிற் சுடும்போது வரும் வெண்ணிறச் சாம்பல்தானே விபூதி. அதை யணிவதால் நாம் அடையத்தக்கது யாது என்றுங் கேட்கலாம்; உருத்திராட்சம் என்பது ஒரு மரத்தின் கொட்டைதானே. இந்தக் கொட்டையை யணிவது வெறும் மூடத்தனமென்றுஞ் சொல்லலாம். இப்படியே ஒவ்வொன்றையும் மூடக்கொள்கையென்று சொல்லலாம். நமது மதத்தை நிந்திக்கும் நோக்கமுடைய பிறமதத்தினர் கூறுவதுபோல, நம்மவரும் கூறத் தலைப்பட்டால், நாம் ஆரோடுநோவோம்? ஆர்க்கெடுத்துரைப்போம்?

சம்மவர்க்குள் மூடவழக்கங்க ளில்லையென்று நான் கூறவில்லை. மூட வழக்கங்கள் கல்வியறிவில்லாதவர்களுக்கிடையிலதா னிருக்கும். கற்றோரிடத்தி லவை காணப்படா. கற்றோருஞ் சிரார்த்தத்தைச் செய்கின்றனரே. சிரார்த்தம் மூடவழக்கமென்பதைக் கற்றவருப்பினர் ஏனோ அறியவில்லை? மூடவழக்கங்கள் இடைக்காலத்திற் றோன்றுமே யல்லாது, சைவத்தோடுடன் பிறக்கமாட்டா. வேதாகமங்களில் அம் மூடக்கொள்கைகளுக்கு இடமுங்கிடைக்கமாட்டாது. உதாரணமாக இங்கு ஒன்று கூறுகின்றேன். பறங்கியர் நமது நாட்டை அரசாண்டபோது சைவர்கள் சைவக்கிரியைகளை யனுட்டிக்கக் கூடாதென்று கடும் பிரமாணம் விதித்தனர். அப்பிரமாணத்துக்கஞ்சி யக்காலத்திருந்த நமது முன்னோர்கள், சிரார்த்தாதி விரதகாரியங்களில் எச்சில் வாழையிலைகளை வீட்டி னிறப்புக்குட் சொருகிவிடுவார்கள். இக்காலிலுஞ் சில பேதையர்கள் அவ்வாறு செய்கிறார்கள். ஏனப்படிச் செய்கிறீர்களென்று கேட்டால், முன்னோர்கள் அப்படிச் செய்திருக்கிறார்கள். ஆகையால் நாமு மப்படிச் செய்கிறோமென்பார்கள். இதுதான் மூடவழக்கம். வீட்டி னிறப்புக்குள் இலை சொருகும் மூடவழக்கம் இடைக்காலத்தில் ஏற்பட்டதுபோலச் சிரார்த்தம் செய்வதும் இடைக்காலத்தில் ஏற்பட்ட தல்லவே. சிரார்த்தம் மூடவழக்கமாயின், யாதிலை வரு

வதங்களுக்கு முன்பு ஏற்பட்டது? யார் ஏற்படுத்தியது.

பிராமணர் தாங்கள் பிழைப்பதற் காகவே யிந்த வழக்கத்தை யேற்படுத்தினரென்பது முற்றும் பொருத்தமற்ற ஆராய்வற்ற பேச்சாகும். பிராமணர் இந்த மூடவழக்கத்தை யேற்படுத்திய போதிருந்த பிராமணரல்லாதார் யாரும் மூடராயல்லவா இருந்திருக்கவேண்டும். ஏன், மூடரைத்தானே பிறர் ஏமாற்றக்கூடும்! தம்போன்ற கல்வியறிவுள்ள ஏனையும் எவரும் ஏமாற்ற முடியாதென்பதைச் சிறுபிள்ளைகளுமறிவரே. பிராமணரல்லாதாருக்கு இப்படி மூடப்பட்டங் கட்டிவிடுவது அழகாகுமா?

பிராமணர் பிறரை யேமாற்றிப் பொருள் பறிக்கும்பொருட்டுச் சிரார்த்தம் என்ற மூடவழக்கத்தை யேற்படுத்தினராயின், தாங்கள் சிரார்த்தம் என்ற மூடவழக்கத்தை யேனோ செய்கிறார்கள். சிரார்த்தம் முதலிய கிரியைகளுக்குப் பிராமணரும் பெரும் பொருள் செலவுசெய்கின்றார்களே. வயிற்றுப்பிழைப்பின் பொருட்டுப் பிராமணரால் ஏற்படுத்தப்பட்டதாயின், பிராமணர் பிராமணரல்லாதாரை நோக்கி, "நீங்கள்தான் சிரார்த்தஞ் செய்யவேண்டியது; நாங்கள் செய்யவேண்டியதில்லை" என்று கூறியிருக்கலாமே. ஏன் அவ்வாறு செய்யாது பிராமணரும் அந்த மூடவழக்கத்தைத் தாமுங் கைக்கொண்டு பெரும்பொருள் செலவு செய்யவேண்டும். அக்காலத்திருந்த பிராமணர்கள் தான் கல்வியறிவான்மேம்பட்டவர்களென்றும், பிராமணரல்லாதாரெவரும் அவ்வளவு கல்வியறிவு வாய்க்கப்பெற்றவரல்லரென்றும் எனது நண்பர் கூறுகின்றார். சரி, அப்படியாயின், கல்வியறிவில்லாத பிராமணரல்லாதாரை எப்படியும் ஏமாற்றி விடலாந்தானே! சிரார்த்தம் நாங்கள் செய்யவேண்டியதில்லை; நீங்கள்தான் செய்யவேண்டுமென்று பிராமணர் பிராமணரல்லாதாருக்குச் சொல்லித் தாங்கள் சிரார்த்தஞ்செய்து பொருளை வீண் விரயஞ் செய்யாதிருக்கலாமல்லவா? இவையொன்றையும் யோசியாது, தமது பிழைப்பின்பொருட்டுப் பிராமணர் சிரார்த்தம் என்ற மூடவழக்கத்தை ஏற்படுத்தினரென்று கூறுதல் நீதியும் நடுவுநிலைமையு மாகாது.

இங்ஙனம்,
க. சி. தங்கசாமிஐயர்,
வயாவிளான்.

## சைவசமயமுங் கொல்லாவிரதமும்.

(முற்றொடர்.)

உலகத்திலுள்ள மிருகசாதிகளும், பறவைக் கூட்டங்களும் மனிதருடைய உதவி அற்ப மேனுமின்றி சுயேச்சையாய் வாழ்ந்து வருகின்றன. ஆனால், மனிதரோ பிறசீவன்களின் உதவியின்றிச் சீவிக்க முடியாதவர்களா யிருக்கின்றனர் வனவாசிகளாயும் மனிதருக்குச் சத்துருக்களாயுமுள்ள நரம், புலி, சிறுத்தை, யானை, சிங்கம் முதலானவைகளையும், ஏனைய மான், மரை, குரங்கு, ஒட்டகம், குதிரை, ஆடு, மாடு ஆதியனவைகளையும் 'Circus' எனப்படும் விளையாட்டுடைப்பழக்கி அதனால் பெருந்தொகை ஈட்டிச் சீவித்து வருகிறார்களென்பது உலகறிந்த ரகசியம் இது. சுயவலிமையை மிகுந்த ஒரு சிறு பகுதியினரின் தந்திரப்பிழைப்பு; இதனால் மற்றையோர் அனுகூலப்படுவதில்லை. உலகமாகிய தேருக்கு அச்சாணிபோல் விளங்கும் விவசாயிகள் மிகுந்த கந்தேசத்தில் ஆடு மாடு முதலாம் வீட்டுமிருகங்களின்றேல், ஒருவழியிலும் தங்கள் தொழிலைச்செய்ய முடியாது.

சந்தேசம் செழிப்படைய வேண்டுமாகில், சகல விளைபொருட்களும் விருத்தியாகவேண்டும்; அங்ஙனம் விளைபொருட்கள் விருத்தியாவதற்குப் போதுமான கால்நடைகளின் உதவியே வேண்டப்படுகின்றது. நாம ஊக்கத்தோடும் சாதுவ்டியோடு மிருப்பதற்குப் பொருத்தமான ஆகாரங்களே காரணமாதல் போல், கலைகளின் விளைவுக்குஞ் செழிப்பிற்கும் கால்நடைகளின் எருக்களும் உழவுமே காரணமாகின்றன. இதுவல்லாமல பால், தயிர், மோர், நெய் முதலான நன்மைகளையும் பெறுகின்றோம். தற்கால நாகரீகத்தின்படி போத்தல்களிலும் தகரங்களிலும் வந்து இங்கு விலைப்படும் பாலவகைகள் எதினால் செய்யப்பட்டனவென்பதை வெளிதருபவர் பருகுவன் எவையுமல்லாம ஆட்டுப்பால், மாட்டுப்பால்களுமேயாகும். இக்கால்நடைகள் பலுகிப் பெருகியிருந்த காலத்தில் சந்தேசம் சகல செழிப்படைந்திருந்தது சகல வளங்களுங் குறைவறவிருந்தமையினாலேயே "புண்ணியபூமி", "ஞானபூமி", "அன்னதானசேத்திரம்", "தாய்நாடு" எனப் பல சிறப்புப்பெயர்களைத் தாங்கிக் கொண்டது. போதும் இந்தச்செல்வம் மூலமேயெல்லாமிருந்ததும் இருப்பதும் கால்நடைகள்தாமென்பதை ஒருவரும் மறுக்க முடியாது.

இங்ஙனம், சந்தேசத்திற்குப் பல வழியிலும் தொண்டாற்றிவரும் ஆடு மாடுகளை அநியாயமாய் வெட்டிக் கொல்வது சரியா? வருடந்தோறும் ஆயிரக்கணக்கான மாடுகளைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து அன்னியர்க்கு உணவுகளாக அவர் கொல்லப்படுகின்றன. நீங்களோ உங்கள் உணவின்பொருட்டுப் பல்லாயிரக்கணக்கான ஆடுகளையுங் கோழிகளையும் பதைக்கத் துடிக்க வெட்டிக் கொன்றுவிடுகின்றீர்கள்.

"எக்கன்றி கொன்றாற்கு முய்வுண்டா முய்வில்லை, செய்நன்றி கொன்ற மகற்கு."

(திருவள்ளுவர்.)

என்றபடி, நன்றியைப்போல் செய்நன்றி மறந்தவர்களை யாரிருப்பார்? இன்றைய்யட்டில் இரண்டகஞ் செய்பவர்கள் நீங்கள். பாற்குடித்த வீட்டிற்குப் பாதகம் நினைப்பவர்களும் நீங்களே; ஆகையால் நீங்கள் உய்வது எங்ஙனம்?

சானறு கோடி வயமலர் வில்வம்
சானுற விட்டு வாழ்த்தி வணங்கினும்
ஊனினை நீக்கி உயர்வாக அல்லது
ஞானமா பூவும் மூலசே ரகொளாரே.

(திருமந்திரம்.)

என்றவாறு நீங்கள், இப்பிறவியும் கொலையுகளவாத அதிபாதகத்தோடு பல வேறு புடைசூழ்ந்தோ மலைபோலக் குவிந்த முறையிட்டுத் தொழுதாலும் மௌனமேனும் பாவத்தைச் சம்பாதிப்பீர்களன்றி புண்ணியத்தைத் தேடமாட்டீர்கள்; ஒரு சிலுவைக்குத் தனதுயிரினும் மேலாயிட்டதான உரிததுவமாருள் கேவலமாயிருக்கவில்லை அதனை சரீரத்தில் எப்பாகத்திலாயினும் ஒரு அற்ப ஊறுசெய்துவிட்டால், அவர் சகித்துக்கொள்ளமாட்டார். பின்னும் அசைவிருந்து உயிரைக் காத்துக்கொள்ள வைத்தனிக்கின்றது. நேற்றுப் பிறந்த இளங்கன்றுக்கும் கைவிழிந்த கோழிக்குஞ்சுகளுக்கும் பக்ஷிப்பட்டவர்களின் சப்தங்கேட்டால் கருடன்களிடமும் பருந்துகளிடமும் இருந்து ஒளித்துக் கொள்கின்றன. இவையெல்லாம் உலகில் அறுபலத்தின் கனமருட்டும் அற்பமேனும் மனுஷ்யனின்றிச் சொல்லுகின்றீர்கள்.

மிருகபட்சிகளின் மாமிசம் வீண்போகாமல் மனிதருக்கு உணவாய்ப்போய்விடுகிறது என்று சொல்லுகிறபொழுது, அவைகளின் சரீரம் புண்ணிய சரீரமென்று சொல்லலாம். இம்மிருகபட்சிகளை கொன்று தின்று பெற்ற அருமை பெருமையாய ஆசையோடு போஷிக்கப்படும் மனிதசரீரமோ, அந்தோ!

"நரி வெனக் கொன்னும் புழுவோ வெனக் கொன்னும் மிகப் பசியுணுஞ், சா வெனக்கென்னும் பருந்தோ வெனக்கென்னுந் தம்புகள், நரி வெனக்கென்னும் புளுகு வெனக்கென்னு மின்னுமுடலை, பரியமுடனே வளர்த்தீர்களினமுலையான பின்னை பேய்மனமே." (பட்டினத்தடிகள்.)

என்பதாய், அருந்தவப் பயனுற் கிடைத்த மனித சரீரம் பெரும் பயனுறுது அவலத்தலழிகிறது மனிதரின் கதி இவ்வாறு.

தக்கத்துட் டேகித் தறவன்கட் சேர்வலர் மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க [ட்ட விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலனுக்க புல்லறிவாளர் வயிறு (நாலடியார்.)

என்றபடி விலங்கு பறவையாதி சீவன்களுக்கு கண்ணுக்கெட்டாத இயமனுவும், அவர்களின் வயிறுகளோ சுடுகாடாயும் முடிகின்றன. தனக்கொரு துன்பம் வந்தபொழுது, அத்துன்பத்தைத் துன்பமாகக் கண்ட ஒருவன், அதைச் சாப்படுத்திக்கொள்ள முயற்சிப்பதுமல்லாது மேலும் துன்பத்தைத்தேட இச்சிப்பானோ? அங்ஙனம் பலவேறு நீங்கள் உங்கள் பாவத்தைத் தொலைக்க முயன்று அநியாயமாய் உயிர்களைப் பலிகொடுத்துப் பின்னும் பாவத்தைத் தேடுகின்றீர்களே! அநேக இடங்களில் இப் 'பலி' என்னும் கொலைத்தொழில் நடைபெற்று வருவதால், அதைப் பாவமென நன்கு தெரிந்தபின் முறைதவறாது வருகின்றார்கள் சிலவிடங்களில முற்றாய் இல்லாமற் செய்துவிட்டார்கள். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே" ஆகையால், நீங்களும் இப்பாவத்தொழிலை விட்டு விட்டுப் புண்ணியவழிபோகவேண்டும். அவ்வகையாய் நடப்பீராகில் மனிதரின் நிலைமைக்குத் தக்கவாறு 'கடைப்பன செய்' வந்த சிறப்பு.

தற்காலம் ஒவ்வொரு தேசத்தினரும், மதத்தினரும், சாதியினரும் தத்தம் நிலைமையில் ஒரு வரிசையிற்குமேல் முன்னேற்ற மடைந்துவிட வேணுமென்று தீவிர முயற்சிகள் செய்கின்றனர். மேல் கீழ் என்னுங் கட்டுப்பாடின்றிச் சமத்துவமுடைய விரும்புகின்றனர், உடைநடை பாவனைகளில் சிறந்து விளங்கக் காத்திருக்கின்றனர். மற்றும் எவ்வாறாயினும் மேன்மைக்குத்தக்கதையே நாடுகின்றனர். ஆகவே, இவ்வளவுஞ்செய்ய நாங்களும் ஓர் பகுதியினரன்றோ? அங்ஙனமாயின் இவ்வரிய தொழிலை விடுங்கள்; நீங்கள் நாகரிகராயிருக்க விரும்பினால் இவ்வதப தொழிலை அகற்றிவிடுங்கள்; நீங்கள் சமத்துவமுடைய விருப்பினால் வாயில்லாத மிருகபட்சிகளும் சமத்துவ வழியை பெறவிடுங்கள்.

"கொன்றவனோ வுயிரையெல்லாமன்பு கொண்டு வென்று, திவ்விய நன்றியுந் திருச்செய்நன்றிகுத் தீமை வண்ணே, ஈன்றெடுத்த தாய்க்கு நிகரான யாதுவும் போறுப்பவையும், வென்ற புதைமையினை வினைநரக வசமில் லைதாமே." (பட்டினத்தடிகள்.)

என்று சுவாமிகள் கூறிப்போந்தவாறு நீங்களும், இவ்வளவுமெல்லாம் அறிந்தும் அறியாமையும் மயக்கமும் செய்து பாவப்பழியல்லாத திருவருட்பேறு அருட்பெருக்குடைய இறைவனை பாலமுறையிட்டு வணங்குவீர், அதன் பின் நீங்கள் தெய்வத்தன்மையை உடையீர்கள். மனிதர் வினைநீக்கத்தானை வணங்குவதுபோல்;

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லாவுயிருந் தொழும்." (திருவள்ளுவர்.)

என்கருணைவள்ளல் மன்னுயிர்க் கொல்லாமையும், வென்றனைத் தின்னுமையுமாகிய செய்வத்தன்மையுடைய உங்களை மன்னுயிர்களெல்லாம் வணங்கும். சுபம்.

ஸ்ரீ. க. த்தியாலன்,
மானிப்பாய்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.